இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 229 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 17 – செவ்வாய்க்கிழமை 31 மார்ச் 2026 – வெளியீடு 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 229 : Thiruvalluvar Year - 2057 - Panguni 17 - Tuesday 31 March 2026 - Dak 16 Pages ₹ 5.00





கொளத்தூரில் மக்கள் வெள்ளமெனத் திரண்ட காட்சி!

## கொளத்தூர் தொகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரத்தைத் தொடங்கினார்!

## சுட்டெரிக்கும் வெயிலிலும் மக்கள் அலையெனத் திரண்டு உற்சாகமாக வரவேற்று வாழ்த்தினர்!

**சென்னை, மார்ச் 31 –**

**சென்னை கொளத்தூர் தொகுதியில் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அமோகமான வாக்குகள் வித்தியாசத்தில் கொளத்தூர் தொகுதி வாக்காளர்கள் தன்னை வெற்றி பெறச் செய்வார்கள் என்று அப்போது முதலமைச்சர் தெரிவித்தார்.**

சட்டமன்றத் தேர்தலில் சென்னை கொளத்தூர் தொகுதியில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் 4வது முறையாக மீண்டும் போட்டியிடுகிறார். இதற்காக சென்னை செம்பியத்தில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வேட்பு மனுவை தாக்கல் செய்தார். தேர்தல் அதிகாரி சாந்தியிடம் தாக்கல் செய்தார்.

வேட்பு மனு தாக்கலின்போது சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, மூத்த வழக்கறிஞர்கள் சண்முகசுந்தரம், ஆர்.விடுதலை, என்.ஆர். இளங்கோ உடனிருந்தனர்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வழிநெடுகிலும் உற்சாக வரவேற்பு!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேட்பு மனு தாக்கலுக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய போது, கொளத்தூர் தொகுதியில் நான்காவது முறையாக நிற்கும் தன்னை வாக்காளர்கள் அமோகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வார்கள் என்றும் தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற கூட்டணி வலுவாக இருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.3.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி எஸ். சாந்தி அவர்களிடம் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். இந்நிகழ்வின்போது, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மூத்த வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், ஆர்.விடுதலை, என்.ஆர்.இளங்கோ ஆகியோர் உடனிருந்தனர்.

இருவண்ணக் கொடியுடன் முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்த தி.மு.க. நிர்வாகிகள் முன்னதாக, வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். சாலையின் இருமருங்கிலும் தி.மு.க. நிர்வாகிகளும், பொதுமக்களும் இருவண்ணக் கொடி யுடன் நின்று முதலமைச்சருக்கு வரவேற்பு அளித்தனர்.

சுட்டெரிக்கும் வெயிலில் திறந்த ஜீப்பில் சென்று தொகுதி மக்களிடம் ஆதரவு திரட்டினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டின் உரிமைக்காக டெல்லியை எதிர்த்து போராடி வருவதாகவும் தமிழ்நாட்டின் உரிமையை காப்பாற்றுவதற்காக இந்த வெற்றி மிகப் பெரிய வெற்றியாக அமையும் என்றும் கூறினார்.

சென்னை கொளத்தூர் தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை

### தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும் – பேட்டி!

தாக்கல் செய்த பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திறந்த ஜீப்பில், தொகுதி மக்களை சந்தித்து ஆதரவு திரட்டினார். கொளுத்தும் வெயிலில் திறந்தவெளி ஜீப்பில் சென்று முதலமைச்சர் வாக்குகளை சேகரித்தார்.

அப்போது, சாலையின் இருமருங்கிலும் தி.மு.க. நிர்வாகிகளும், பொதுமக்களும் திரண்டு நின்று முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்து, தங்களது ஆதரவை தெரிவித்தனர். தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கடந்த 5 ஆண்டுகாலத்தில் கொளத்தூர் தொகுதிக்கு செய்த சாதனைகள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டார்.



கழகத்தின் தேர்தல் அறிக்கையே காக்கும் கருவூலம்!

ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!

